முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2026–ம் ஆண்டு **ஜீன்** மாதம் 10–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2023**

**வா.சா:–1 (விஜியகுமார்)**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்):–**

நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் நான் வங்கி மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 2010–ம் வருடம் பணி ஓய்வு பெற்றேன். தற்போது என்ன செய்துவருகிறேன் என்றால் வீட்டில் தான் இருந்துவருகிறேன். நான் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று வீட்டிலிருந்து வரும் விவரத்தை நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையிலோ, எனது வழக்கிலோ சொல்லவில்லையென்றால் சரிதான். பிரதிவாதியை எப்படி தெரியுமென்றும், எவ்வளவு வருட காலமாக தெரியுமென்ற விவரம் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதியை எனக்கு 7, 8 வருடமாக தெரியும். நான் மேற்படி சங்கதிகளை வழக்கில் சொல்லவில்லையென்றும், தற்போது தான் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன தொழில் செய்துவருகிறார் என்ற விவரம் வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்குரையிலும் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். 15.07.2020–ம் தேதியில் பிரதிவாதிக்கு தாவா கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த சமயம் கொரோனா கால கட்டம் என்றால் அப்போது கொரோனா முடிந்துவிட்டது. பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.2 லட்சம் ரொக்கமாக கொடுக்கப்பட்டதா, காசோலை வழியாக கொடுக்கப்பட்டதா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். கடன் கொடுத்த தொகையை கையில் வைத்திருந்தேனா அல்லது வங்கியில் எடுத்துக்கொடுத்தேனா என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பாக கடன் கேட்டிருந்தார். அதனால் கையிலிருந்த தொகையை கடனாக கொடுத்தேன். பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததற்கு வரவு செலவு கணக்கு ஏதாவது பராமரித்து வந்தேனா என்றால் வரவு செலவு கணக்கிற்கு நோட்டு உள்ளது. வரவு செலவு கணக்கு

சம்மந்தமான நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனக்கு மாத ஓய்வூதியம் எவ்வளவு பெற்று வருகிறேன் என்றால் 2020-ம் வருடத்தில் மாதம் ரூ.45,000/- பெற்றுவந்தேன். வருமான வரி செலுத்திவருகிறேனா என்றால் ஆமாம். வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் விவரம் வழக்குரையில் சொல்லவில்லையென்றால் சரிதான். நான் கடன் கொடுத்த போதும், பிரதிவாதி புரோநோட்டில் கையெழுத்து போட்டபோதும் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் எனது மனைவி இருந்தார். பிரதிவாதிதான் தன் கைப்பட புரோநோட்டை எழுதிக்கொடுத்தார். கடன் கொடுத்த போது எனது மனைவியை தவிர 3ம் நபர் தரப்பு சாட்சிகள் யாரும் இல்லையென்றால் சரிதான். உண்மையில் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்திருந்தால் 3ம் நபர் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டில் யார் இடது கை பெருவிரல் ரேகை வைத்தார்கள் என்றால் பிரதிவாதி தான் வைத்தார். அந்த இடத்தில் யாருடைய கை ரேகை என்ற விவரம் எழுதப்படவில்லையென்றால் சரிதான். பிரதிவாதி கைரேகை வைத்திருந்தால் அவர் பெயர் எழுதியிருப்பார் என்றும், அவர் ரேகை இல்லையென்பதால் தான் பிரதிவாதியின் பெயர் எழுதப்படவில்லையென்றும் தாவா கடனுறுதி சீட்டானது மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் என்னிடமிருந்து தாவா கடனை பெற்றுக்கொண்டு என்னுடைய பெயருக்கு கடனுறுதி சீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. அதனால் தான் எனது மனைவியை தவிர வேறு யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லையென்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கவில்லையென்றும், தாவா கடனுறுதி சீட்டானது என்னால் இந்த

வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்டது என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |